உ

# ராகுகால ஸ்ரீ துர்க்கா பூஜை

# திருவிளக்கு வழிபாடு



வெளியீடு:

## சர்வதேச இந்துமத குருபீடம்

(அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்)

கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"HINDU RELIGIOUS GURU PEEDATHIPATHI"
DR. SRI [illegible] PATHASAN
SAMBASIVA SIVACHCHARYAR J.R
INTERNATIONAL
HINDU RELIGIOUS GURU PEEDAM
751/A, BLOEMENDHAL ROAD,
COLOMBO - 15. SRILANKA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/200/0676

உ

# ராகுகால ஸ்ரீ துர்க்கா பூஜை

# திருவிளக்கு வழிபாடு

## பூஜா விதானம்



வெளியீடு

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி

*ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்*

*(அகில இலங்கை சமாதான நீதவான்)*

## சர்வதேச இந்துமத குருபீடம்

(அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்)

- கொழும்பு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEW UTHAYAN PUBLICATION (PVT.) LTD.
JAFFNA
2001-10-26
SRI LANKA.
202/2, NAVALAR ROAD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயினைத் தீர்ப்பதும் நுண்ணறி விசுவதும்



சிஷ்டனாய்ச் செய்வதும் குங்கும மாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதம் ஒரு ஹோமம்

(விஷேட யாகம்)

மாதம் ஒரு ஹோமம் என்னும் விஷேட யாகத்தில் தங்கள் பெயர்களும் சேர்த்துக் கொள்ளவிரும்பினால் தங்கள் பெயர், குடும்பத்தினர் பெயர், நக்ஷத்திரம், வேண்டுதல்களை எழுதி கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தால் விஷேட யாகத்தில் தங்கள் பெயர்களும் சேர்த்துக் கௌ்ளப்பட்டு விபூதிப் பிரசாதம் அனுப்பிவைக்கப்படும்.

இதற்கென கட்டணம் ஏதும் அறவிடப் படமாட்டாது. பக்தர்கள் மனமுவந்து அனுப்பும் காணிக்கைகள் ஏற்றுக் கௌ்ளப்படும்.


## சர்வதேச இந்துமத குருபீடம்

அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்

**751/A, Bloemendhal Road,**

**Colombo - 15.**

**T.P. 072 - 422239, 527025**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

"இலங்கை இந்துமத குருபீடாதிபதி"
"சிவாகம ஞானி" "கலாநிதி"

## 'அருள்ஜோதி' சிவஸ்ரீ. ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் அருளாசியுரை

ஒளி ஏற்பட்டால் தான் இருள் அகலும். இருள் அகன்றால்தான் பொருள் கண்களுக்குப் புலப்படும். அக்ஞான இருள் அகலவும் ஞான ஒளி உண்டாகவும் திருவிளக்குப் பூஜை சைவசமயிகளுக்கு மிக அவசியம். மேலும் தெய்வ வழிபாட்டு முறையிலே ஜோதி வடிவத்திலான இறைவனையே முழுமுதற் கடவுளாக வழிபடும் முறை பண்டுதொட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. நம் இறைவன் ஆதி யந்த மத்திய ரகிதராகிய சிவன், ஜோதி மயமானவர். (ஜோதிர்மயம், விங்கம்) என்று ஆகம சாஸ்திரங்கள், புராணங்கள் விதந்து கூறுகின்றன. ஜோதியே சுடரே என்பார் மணிவாசகர், அருட்பெருஞ் ஜோதி என்பார் இராமலிங்கஸ்வாமிகள். அருள் விளக்கே அருட் சுடரே அருட்ஜோதி சிவமே என்றும் போற்றுவார். வடலூர் வள்ளல்.

**திருநாவுக்கரசு ஸ்வாமிகளும்,**

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலும் பொய்கையாழ்வார்,

வையகம் தகழியாக வார்கடரே நெய்யாக
வெய்யக் கதிரோன் விளக்காகச் – செய்ய
சுடரொளியின் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடரொளி நீங்கவே. என்றும்

பூதத்தாழ்வார் கூறுகின்றார்

அன்பே தகழியாக ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியாக – நன்புருகி

ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு.
ஞானத்தமிழ் புரிந்த நான்.

பொய்கையாழ்வார்.

ஸ்தூலமாக கண்ணில் காணும் பொருள்களைக் கொண்டு விளக்கு ஏற்ற, பூதத்தாழ்வார் சூக்ஷமப் பொருள்களைக் கொண்டு ஞான விளக்கேற்றினார். இவ்விருவர் ஏற்றிய ஜோதியைக் கொண்டு பேயாழ்வார்.

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று பரமாத்மாவைத் தரிசிக்கிறார். எனவே தீபதரிசனமே, தெய்வதரிசனமாகிறது. தீபத்தை தெய்வ வழிபாடாகக் கொண்டு இயற்றும் பூஜை அக்னியைக் கொண்டு செய்யும் பெரும் யாகத்திற்குச் சமானமாகும். லக்ஷ்மிகளில் திருமகள் தீபலக்ஷ்மியாக விளங்குகிறாள்.

ஸ்திரீகளைக் குடும்பவிளக்கு என்பதால் அவர்களே இந்தத் தீப பூஜையில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களும் இப்பூஜைகளைத் தாராளமாகச் செய்யலாம்.

ஆஸ்தீகப் பெருமக்களுக்கு திருவிளக்குப் பூஜையின் அரிய விஷயங்களையும், பூஜை முறையையும் அனேக நூல்களிலிருந்து சேகரித்து லோகோபகாரமாகவும் ஞான ஒளி பிரகாசிக்கவும்.
எல்லாம் வல்ல அன்னை பராசக்தி திருவருள் துணைகொண்டு ஆசீர்வதிக்கிறேன்.

சுபம்

"சிவாகம சிரோமணி", "வித்யா ஸாகரம்"

அருள்ஜோதி

கலாநிதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்

**Dr. K. Sambasiva Sivachcharyar**

M.I.H. & M.D.H. (R.I.M.P. No. 4714)

(இலங்கை இந்துமத குருபீடாதிபதி)

ஸ்ரீ தேவி அருள்ஜோதி நிலையம்

98, செம்மணி றோட்,

நாயன்மார்கட்டு, நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

எல்லாம் வல்ல அன்னை ஆதிபராசக்தியான அம்பிகையை தீபத்தில் ஆவாஹனம் செய்து தீபாலக்ஷ்மியை நம என்று பூசித்து தீபத்தில் எழுந்தருளப்பண்ணி ஆசனம் பாத்தியம் அர்க்யம் கொடுத்து சந்தனம், குங்குமம், சாத்தி, (வஸ்த்திரம்) பட்டுக்கட்டி வெற்றிலை, பழம், பாயாசம், கற்கண்டு, தேங்காய் நைவேத்தியம் செய்து தீப, கற்பூர ஆராதனை செய்து ஸஹஸ்ரநாமம், (1000) அஷ்டோத்தர சதம் (108) குங்குமத்தால் அர்ச்சனை செய்து வழிபட்டு வந்தால் ஸ்ரீலக்ஷ்மி மனமகிழ்ந்து கேட்கும் வரங்களையும் சகல சௌபாக்கியங்களையும் வழங்குவாள் என்பதில் சந்தேகமில்லை.

அம்பிகைக்குப் பௌர்ணமி தினம் மிகவிஷேசமாகக் கூறப்படுகிறது.

பௌர்ணமி அன்று தோன்றுகின்ற பூரணசந்திரனில் அம்பிகை இருக்கிறாள்.

இதை லலிதா ஸஹஸ்ர நாமத்தில் –
"சந்திர மண்டல மத்தியஸ்தாயை நம" என்றும்,
"சாரு சந்திர கலாதரா" என்றும் கூறப்பட்டுள்ளது.

எப்போதும் பூரணகலையுடன் கூடிய சந்திரமண்டலத்தில் வீற்றிருப்பவள் என்றும் அழகிய சந்திரகலையைத் தரித்தவள் என்றும் போற்றப்படுகிறாள்.

மேலும் அம்பிகை உபாசகராகிய அபிராமிப்பட்டருக்காகத் தனது தோட்டைக் கழற்றி ஆகாசத்தில் வீசி – நிறைந்த அமாவாசையன்று – பௌர்ணமியைத் தோற்றுவித்தாள். எனவேதான் பௌர்ணமி அன்னை வழிபாட்டிற்கு மிகவும் விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது.

பௌர்ணமியில் அன்னை பூரணசந்திரனாக காட்சி கொடுக்கிறாள். தன்னையே நினைத்து தியானத்திலிருந்த அபிராமிப்பட்டர் அமாவாசையன்று கரபோஜி மன்னனுக்கு பௌர்ணமியென்று கூறினார். தன்னை நம்பியுள்ள பக்தனைக் காப்பாற்ற அன்னையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணசந்திரனாகக் காட்சிகொடுத்தாள் (அமாவாசை எனும்) இருளை நீக்கி (பௌர்ணமி எனும்) பூரண ஒளியைக் கொடுத்தாள்.

எனவே நாம் அன்னையின் நினைவோடு பௌர்ணமிகள் தோறும் திருவிளக்குகள் ஏற்றி வழிபட்டால் எம்மிடமுள்ள தீய – இருள்கள் மறைந்து நல்ல ஒளிப்பிரகாசமான வாழ்வு அமையும் என்பது திண்ணம்.

எனவே!

கணவரின் நீண்ட ஆயுள் வேண்டி சுமங்கலிப் பெண்களும், நல்லகுணமுடைய வரன் கிடைக்க வேண்டி கன்னிப்பெண்களும், லக்ஷ்மீகடாக்ஷம், சந்நதான விருத்தி, தன தான்ய விருத்தி, வியாபார அபிவிருத்தி போன்ற அஷ்ட ஐஸ்வர்யங்களும் கிடைக்க வேண்டி ஆண்களும் இந்தத் திருவிளக்குப் பூஜையைச் செய்தால் ஸ்ரீலக்ஷ்மீ தேவியின் அருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்.

எனவே பௌர்ணமியிலும் வெள்ளிக்கிழமைகளிலும் திருவிளக்குப் பூஜை செய்யும் பக்தர்களுக்காக இந்தச் சிறு நூலைத் தொகுத்து வழங்குகிறோம். அனைவரும் இதனைப் படித்துப் பயன்பெற இறை அருளை வேண்டுகிறோம்.

ஸர்வே ஜனாகா ஸுகினோ பவந்து

– சுபம் –

என்றும் ஐயன் மலர்த்தாள்
வாழ்த்தி வணங்கும்

"ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி, கிரியா கலாநிதி"
ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சரவணபவக் குருக்கள்

*தலைவர் :* இலங்கை பிராம்மண சமாஜம்
*தலைவர் :* இந்து சமய கலாச்சார முத்தமிழ்ச் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ லக்ஷ்மீ அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம் ப்ரக்ருத்யை நம:
ஓம் விக்ருத்யை நம:
ஓம் வித்யாயை நம:
ஓம் ஸர்வபூதஹித ப்ரதாயை நம:
ஓம் ச்ரத்தாயை நம:
ஓம் விபூத்யை நம:
ஓம் ஸுரப்யை நம:
ஓம் பரமாத்மிகாயை நம:
ஓம் வாசேம நம:
ஓம் பத்மாலயாயை நம:
ஓம் பத்மாயை நம:
ஓம் சுசயே நம:
ஓம் ஸ்வாஹாயை நம:
ஓம் ஸ்வதாயை நம:
ஓம் ஸுதாயை நம:
ஓம் தன்யாயை நம:
ஓம் ஹிரண் மய்யை நம:
ஓம் லக்ஷ்ம்யை நம:
ஓம் நித்ய புஷ்டாயை நம:
ஓம் விபாவர்யை நம:
ஓம் அதித்யை நம:
ஓம் தித்யை நம:
ஓம் தீப்தாயை நம:
ஓம் வஸுதாயை நம:
ஓம் வஸுதாரிண்யை நம:
ஓம் புண்யகந்தாயை நம:
ஓம் ஸுப்ரஸந்நாயை நம:
ஓம் ப்ரஸாதாபி முக்யை நம:
ஓம் கமலாயை நம:
ஓம் காந்தாயை நம:
ஓம் காமாயை நம:
ஓம் க்ஷீரோதஸம்பவாயை நம:
ஓம் அனுக்ர ஹப்ரதாயை நம:
ஓம் புத்யை நம:
ஓம் அநகாயை நம:
ஓம் ஹரிவல்லபாயை நம:
ஓம் அசோகாயை நம :
ஓம் அம்ருதாயை நம:
ஓம் தீப்தாயை நம:
ஓம் லோக சோக விநாசிந்யை நம:
ஓம் தர்ம நிலயாயை நம:
ஓம் கருணாயை நம:
ஓம் லோகமாத்ரே நம:
ஓம் பத்மப்ரியாயை நம:
ஓம் பத்மஹஸ்தாயை நம:
ஓம் பத்மாக்ஷ்யை நம:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் பத்மஸுந்தர்யை நம: | ஓம் சுக்லமால்யாம் பராயை நம: |
| ஓம் பத்மோத்பவாயை நம: | ஓம் ச்ரியை நம: |
| ஓம் பத்ம முக்யை நம: | ஓம் பாஸ்கர்யை நம: |
| ஓம் பத்மனாப ப்ரியாயை நம: | ஓம் பில்வ நிலயாயை நம: |
| ஓம் ரமாயை நம: | ஓம் பத்ம மாலாதராயை நம: |
| ஓம் பத்மிந்யை நம: | ஓம் தேவ்யை நம: |
| ஓம் பத்மகந்திந்யை நம: | ஓம் வராய ரோஹாயை நம: |
| ஓம் வஸுந்தராயை நம: | ஓம் யசஸ் விந்யை நம : |
| ஓம் உதா ராங்காயை நம: | ஓம் ஸித்தயே நம: |
| ஓம் ஹரிண்யை நம: | ஓம் ஸ்த்ரைணஸௌம் யாயை நம: |
| ஓம் ஹேம மாலின்யை நம: | ஓம் சுபப்ரதாயை நம: |
| ஓம் தநதாந்யகர்யை நம: | ஓம் வரலக்ஷ்ம்யை நம: |
| ஓம் ப்ரபாயை நம: | ஓம் வஸுப்ரதாயை நம: |
| ஓம் சந்ரவதநாயை நம : | ஓம் சுபாயை நம: |
| ஓம் சந்ராயை நம : | ஓம் ஹிரண்ய ப்ராகா ராயை நம: |
| ஓம் சதுர் புஜாயை நம: | ஓம் ஸமுத்ர தநயாயை நம: |
| ஓம் சந்ர ரூபாயை நம: | ஓம் ஜயாயை நம: |
| ஓம் இந்திராயை நம: | ஓம் மங்களா தேவாயை நம: |
| ஓம் இந்து சீதலாயை நம: | ஓம் விஷ்ணு வக்ஷஸ்தலஸ்தி தாயை நம |
| ஓம் ஆஹ்லாத ஜநந்யை நம: | ஓம் விஷ்ணு பத்ந்யை நம: |
| ஓம் புஷ்ட்யை நம: | ஓம் ப்ரஸந்நாக்ஷ்யை நம: |
| ஓம் சிவாயை நம: | ஓம் நாராயணஸமாச்ரிதாயை நம: |
| ஓம் சிவகர்யை நம: | ஓம் ஸர்வோபத்ர நிவாரிண்யை நம: |
| ஓம் ஸத்யை நம: | ஓம் நவ துர்க்காயை நம: |
| ஓம் விமலாயை நம: | ஓம் மஹாகாள்யை நம: |
| ஓம் விச்வ ஜநந்யை நம: | ஓம் ப்ரம்ம விஷ்ணுசிவாத்மிகாயை நம: |
| ஓம் ப்ரீதி புஷ்கரிண்யை நம: | ஓம் த்ரிகால ஜ்ஞானஸம் காயை நம: |
| ஓம் சாந்தாயை நம: | ஓம் புவனேச்வர்யை நம: |

ஓம் நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி சமர்ப்பயாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மஹாலக்ஷ்மி அஷ்டகம்

நமஸ்தேஸ்து மஹாமாயே ஸ்ரீபீடேஸுரபூஜிதே I
சங்கர சக்ர கதாஹஸ்தே மஹாலக்ஷ்மி நமோஸ்துதே II
நமஸ்தே கருடாரூடே கோலாஸுர பயங்கரி I
ஸர்வ பாபஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே II
ஸர்வஜ்ஞே ஸர்வ வரதே ஸர்வ துஷ்ட பயங்கரி I
ஸர்வ துக்க ஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே II
ஸித்தி புத்தி ப்ரரே தேவி புக்தி முக்தி ப்ரதாயிநி I
மந்த்ர மூர்த்தே ஸதா தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே II
ஆத்யந்த ரஹிதே தேவி ஆதி சக்தி மகேஸ்வரி I
யோகஜ்ஞே யோக ஸம்பூதே மஹாலக்ஷ்மி நமோஸ்துதே II
ஸ்தூல ஸுக்ஷ்ம மஹா ரௌத்ரே மஹா சக்தி மஹோதரே I
மஹாபாப ஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே II
பத்மாஸந ஸ்த்திதே தேவி பரப்ரஹ்ம் ஸ்வரூபிணி I
பரமேசி ஜகந்மாதா மஹாலக்ஷ்மி நமோஸ்துதே II
ஸுவேதாம்பரதரே தேவி நாநாலங்கார பூஷிதே I
ஜகத் ஸ்திதே ஜகந்மாதா மஹாலக்ஷ்மி நமோஸ்துதே II
மஹாலக்ஷ்மியஷ்டக ஸ்தோத்ரம் ய படேத் பக்தி மான்நரகா I
ஸர்வஸித்தி மவாப்நோதி ராஜ்யம் ப்ராப்நோதி ஸர்வதா II
ஏககாலே படேந் நித்யம் மஹாபாப விநாசநம் I
த்விகாலம் ய படேந் நித்யம் தநதாந்ய ஸமந்வித II
த்ரிகாலம் ய படேந் நித்யம் மஹாசத்ரு விநாசநம் I
மஹாலக்ஷ்மீர் பவேந் நித்யம் ப்ரஸந்தா வரதா ஸுபா II

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸ்ரீ சாஸ்தாபீட மாதரணியினர்
நடத்தும்

## ராகுகால துர்க்கா பூஜை

**பிரதி செவ்வாய்க்கிழமைகள் தோறும்**

**கொழும்பு - 13, (கம்பையா சத்திரம்)**

**ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில்**

**பி. ப. 3.00 மணிமுதல் 4.30 மணிவரை**

**நடைபெற்றுவருகிறது**

**மாதரணி**
**சபரிமலை ஸ்ரீசாஸ்தாபீடம்**

751/A, Bloemendhal Road, Colombo - 15.
Tel.: 527025.



உ

# ராகுகால துர்க்கா பூஜை

சர்வலோக நாயகியாகிய அன்னை பராசக்தியை நம் முன்னோர்கள் பல வடிவில், பல நாமங்களால் வழிபட்டு முத்தியடைந்தார்கள். நமக்குச் சோதனைகள் வருகின்றபோதுதான் நாம் இறைவனை நினைக்கின்றோம். அந்தச் சோதனைகள் எமக்குப் பெரும் வேதனை தரும்போது இறைவா என்னைக் காப்பாற்று என்கிறோம்.

இப்படியான சோதனைகள் வருகின்ற வேளைகளில் இறைவனைப் பிரார்த்தித்து அதிலிருந்து விடுபட்டு நற்கதியடையப் பல விரத முறைகளையும் பூஜை முறைகளையும் சொல்லிவைத்துச் சென்றுள்ளார்கள் முன்னவர்கள்.

அந்த முறைகளில் ஒன்றுதான் ராகுகால துர்க்கா பூஜை.

இந்தப் பூஜையைச் செய்வதனால் சகல சௌபாக்கியங்களும் பெற்று நலமுடன் வாழலாம்.

பௌர்ணமி, அட்டமி, வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமைகளில் ராகுகால நேரத்தில் இந்தப் பூஜையைச் செய்ய வேண்டும்.

ராகு, கேது காலச் சர்ப்பதோஷமுடையவர்களும், செவ்வாய் தோஷம், மாங்கல்ய தோஷம் உள்ளவர்களும், திருமணம் தடைப்படுகின்ற கன்னிப் பெண்களும் ராகுகால நேரத்தில் துர்க்கையை வழிபட்டால் சகல தோஷங்களும் நீங்கப்பெற்று நல்வாழ்வு பெறுவார்கள் என்பது திண்ணம்.

## ராகுகாலம்

செவ்வாய்க்கிழமைகளில் மாலை 3.00 மணிமுதல்
மாலை 4.30 மணிவரை

வெள்ளிக்கிழமைகளில் காலை 10.30 மணிமுதல்
நண்பகல் 12.00 மணிவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகுகால நேரத்தில் ராகுகால தேவனின் அதிதேவதையான ஸ்ரீ துர்க்கையைத் தியானித்து தேசிக்காய் விளக்கேற்றி, கும்பத்தின் முன்னோ அல்லது அம்மன் படத்தின் முன்னோ, அல்லது குத்துவிளக்கின் முன்னோ அமர்ந்து துர்க்கையை நினைத்துத் தியானம் செய்து தூப, தீப ஆராதனை செய்து, குங்குமத்தால் அஷ்டோத்ர சத நாமம், (நூற்றி எட்டு) அல்லது திரிசதிநாம (முன்னூறு) அல்லது ஸஹஸ்ரநாமம் (ஆயிரம்) சொல்லி அர்ச்சனை செய்து, துர்க்காஷ்டகம் தேசிக்காய்ப் பதிகம் குங்குமாஷ்டகம் முதலியவற்றைப் பக்திசிரத்தையுடன் விரதமிருந்து பாராயணம் செய்து அன்னை பராசக்தி வடிவான – துன்பங்களைப் போக்கிடும் – துர்க்கையைச் சகலரும் வழிபட்டு அருள்பெற வேண்டுமெனும் பெருநோக்கோடு இச்சிறு நூலை எழுதி அன்பர்களுக்கு வழங்குகிறோம். இதனை அனைவரும் படித்துப்பயன்பெற வேண்டுகிறோம்.

## தேசிக்காய் விளக்கின் சிறப்பு

அன்னை பராசக்தி வடிவான ஸ்ரீ துர்க்கா தேவி கும்பன், சும்பன், நிசும்பன், மஹிஷன், மஹிஷாசுரன் முதலான அசுரர்களைச் சம்காரம் செய்துவிட்டு வருகின்றபோது –

தேவியின் தூதுவன் ஒருவன் வந்து அம்மா அனைத்து அசுரர்களையும் ஒழித்துவிட்டோம் என்று பெருமையாகக் கூறுனீர்களே, இந்தப் பிரபஞ்சத்தில் எத்தனையோ அசுரர்கள் இன்னும் ஒழிந்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் எவ்வாறு தாங்கள் அழிக்கப் போகிறீர்கள் என்று கேட்டான்.

இதனால் கோபங்கொண்ட அன்னை ஸ்ரீ துர்க்கா தேவி திரிலோக சஞ்சாரியாகிய நாரத மஹரிஷியை அழைத்து பிரபஞ்சத்திலுள்ள அனைத்து அசுரர்களையும் ஒன்றுதிரட்டி வருமாறு ஆணையிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதறியாது நின்ற நாரதர் சிவனை நினைந்து ஸ்தோத்திரம் செய்தார். சிவனும் தோன்றி நாரதா உன் மனக்குழப்பம் எனக்குப் புரிகிறது. கவலைப்படாதே என்று கூறி பழம் ஒன்றைக் கொடுத்து இதனைக் கொண்டுபோய் தேவியிடம் கொடு. அவள் கோபம் தணியும் என்று கூறினார்.

பெருமகிழ்ச்சியோடு அன்னையை அடைந்த நாரதர் சிவனால் கொடுக்கப்பெற்ற எலுமிச்சம் பழத்தை ஸ்ரீ துர்க்கா தேவியிடம் கொடுத்து தாயே உலகத்திலுள்ள அனைத்து அசுரர்களையும் மடக்கி உலகையே என் உள்ளங்கையினுள் அடக்கிக் கொண்டு வந்துள்ளேன் என்றார்.

கடுங்கோபத்துடனிருந்த ஸ்ரீ துர்க்கா தேவி அதனை வாங்கி வாயினுள் போட்டு விழுங்கிவிட்டாள். உடனே அன்னை சாந்தமானாள்.

நாராதா உனக்கு வேண்டும் வரங்களைக் கேள் என்று அன்னை கூற

நாரதரும் அடியார்களின் துக்கங்களை யெல்லாம் களைத்து அருள்கொடுக்க வேண்டும் என்றும், தேசிக்காய் கொண்டு பூஜிக்கும் பக்தர்களைக் காத்தருள வேண்டும் என்று கேட்க, அப்படியே ஆகுக என அருளினார் அன்னை.

எனவேதான் அன்னை கோபத்தைத் தீர்த்து சாந்தப்படுத்திய தேசிக்காய் அன்னை வழிபாட்டிற்கு மிகவும் உகந்ததாயிற்று.

உலகத்தின் வடிவான தேசிக்காயினை எமது உடம்பாக நினைத்து இரு துண்டாக அறுத்து உள்ளேயிருக்கின்ற சாறு, சுளைகளை, அகற்றி மறுபுறம் திருப்பி தகளியாக்கி, நெய்விட்டு, திரிபோட்டு, சுடர்விட்டுப் பிரகாசிக்கும்படி தீபம் ஏற்றி அன்னை துர்க்கா தேவியை வழிபட்டால் அவர் சாந்தஸ்வரூபியாகி நாம் கேட்கும் வரங்களை நல்குவாள்.

விசேஷமாக ராகுகால நேரங்களில் தேசிக்காயில் விளக்கேற்றி வழிபடும் அன்பர்களை அன்னை ஆசீர்வதிப்பாள் என்பது திண்ணம்.

தேசிக்காய்– நமது உடல்
அறுத்தல் – மனதிலுள்ள தீய சிந்தனையை அறுத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சாறு | – | சுளைகளை அகற்றுதல் காமம், குரோதம், லோபம், மோகம் மதம், ஆச்சரியம் போன்ற தீய குணங்களை அகற்றி மறுபுறம் திருப்பி |
| நெய் | – | நற்குணங்களுடன் கூடிய ஆர்வம் |
| திரி | – | ஆணவம், கன்மம், மாயையை முறுக்கி திரியாக்கி |
| சுடர் | – | ஞானம் என்னும் ஒளியை உண்டாக்குதல் |

எனவே அன்னை ஸ்ரீ துர்க்கா தேவியை ராகுகால நேரங்களில் தேசிக்காய் விளக்கேற்றி வழிபட்டு வாழ்வோமாக.

என்றும் ஐயன் மலர்த்தாள்
வாழ்த்தி வணங்கும்

சுபம்

"ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி, கிரியா கலாநிதி"
ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சரவணபவக் குருக்கள்
(தலைவர், இந்துசமய கலாச்சார முத்தமிழ்ச் சங்கம், கொழும்பு.)

**ALL SRI LANKA
SABARIMALAI SRI SASTHAPEEDAM**

751/A, Bloemendhal Road,
Colombo - 15.
Tel.: 527025, 072 - 422239

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராகு கால
# ஸ்ரீ துர்க்கா அஷ்டோத்தர சத நாமாவளி (108)

| | | |
|---|---|---|
| ஓம் ஐம் கார | பீடமத்யஸ்தாயை | நம |
| ஓம் ஐம் கார | ராஸன ஸுஸ்திதாயை | நம |
| ஓம் ஐம் கார | ஜப ஸந்துஷ்டாயை | நம |
| ஓம் ஐம் கார | ஜப ஸௌக்கியதாயை | நம |
| ஓம் ஐம் கார | மோஹன பராயை | நம |
| ஓம் ஐம் கார | பரணோஜ் வலாயை | நம |
| ஓம் ஐம் கார | ரூபாயை | நம |
| ஓம் ஐம் கார | தேவ்யை | நம |
| ஓம் ஐம் கார | வரவர்ணின்யை | நம |
| ஓம் ஐம் கார | கல்ப வ்ருஷஸ்தாயை | நம |
| ஓம் ஐம் கார | லோசனாயை | நம |
| ஓம் ஐம் கார | வாச்யாயை | நம |
| ஓம் ஐம் கார | பூஜ்யாயை | நம |
| ஓம் ஐம் கார | பங்கஜாயை | நம |
| ஓம் ஐம் கார | காணானா வாஸாயை | நம |
| ஓம் ஐம் கார | கிரி ரூபிண்யை | நம |
| ஓம் ஐம் கார | கந்தரா ஸிம்ஹ்யை | நம |
| ஓம் ஐம் கார | க்ஷரசோபிதாயை | நம |
| ஓம் ஐம் கார | ப்ஜ சமாஸீனாயை | நம |
| ஓம் ஐம் கார | முக மண்டலாயை | நம |
| ஓம் ஐம் கார | ரண்ய ஹரிண்யை | நம |
| ஓம் ஐம் கார | அமிர்த வர்ஷிண்யை | நம |
| ஓம் ஐம் கார | கமலா வாஸாயை | நம |
| ஓம் ஐம் கார | உத்யான வாஸின்யை | நம |
| ஓம் ஐம் கார | வந்திதபதாயை | நம |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் ஐம் கார | ராம்ருத ஸந்தாதாயை | நம |
| ஓம் ஐம் கார | அமிர்த பாயின்யை | நம |
| ஓம் ஐம் கார | ரண்ய ஸஞ்சராயை | நம |
| ஓம் ஐம் கார | ச்ரய விராஜிதாயை | நம |
| ஓம் ஐம் கார | மந்த்ர ஸஞ்ஜப்யாயை | நம |
| ஓம் ஐம் கார | ஜபஸித்திதாயை | நம |
| ஓம் ஐம் கார | நந்தனோத்யான ஜ்வல மூர்த்தஜாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | மந்த்ர ஸமவாஸாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | ஸும ஸோபிகாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | ம்புஜ மத்தியகாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | பூஜன ப்ரீதாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | க்ஷர ரூபிண்யை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | க்ஷர ஸஞ் ஜர்ப்யாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | ரண்ய வல்லாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | மணி பூஷாட்யாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | ராம சோபிதாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | ஜப ஸுப்ரீதாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | கமலோஜ்வவாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | சிகி ஸம்பூதாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | கிரி வாஸின்யை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | ஒட்யாண பீட்ஸ்தாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | வர தாயின்யை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | ரஞ்சன பராயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | ஆதர்ச பிம்பிதாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | உத்யான ஸம் சோபாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | ஆரண்ய வாஸின்யை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | விலஸத் ரூபாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | ஆத்ய பாஸ்வராயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | இந்து கலாதாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | சசி மண்டலாயை | நம |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் ஹ்ரீம் கார | நாத ரசிகாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | ஸ்வாத ப்ருங்கிகாயை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | வாபிகா ஹம்ஸ்யை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | ஜ்வல சர்வாங்க்யை | நம |
| ஓம் ஹ்ரீம் கார | மது மத்தாயை | நம |
| ஓம் க்லீம் கார | மத்ய நிலையாயை | நம |
| ஓம் க்லீம் கார | ஹிருதஸ்திதாயை | நம |
| ஓம் க்லீம் கார | பிம்ப ஸம்சோபாயை | நம |
| ஓம் க்லீம் கார | ஆஹ்லாத சந்திரிகாயை | நம |
| ஓம் க்லீம் கார | ஆனந்த ஸத்தாத்ர்யை | நம |
| ஓம் க்லீம் கார | மணி மண்டபாயை | நம |
| ஓம் க்லீம் கார | பீட மத்யஸ்தாயை | நம |
| ஓம் க்லீம் கார | பரஸௌக்யதாயை | நம |
| ஓம் க்லீம் கார | ஸௌத மத்யஸ்தாயை | நம |
| ஓம் க்லீம் கார | திலகோஜ்வலாயை | நம |
| ஓம் க்லீம் கார | மோத ஹிருதயாயை | நம |
| ஓம் க்லீம் கார | விஜய ப்ரதாயை | நம |
| ஓம் க்லீம் கார | பீஜ ஸர்வஸவாயை | நம |
| ஓம் க்லீம் கார | ஸ்திதாயை | நம |
| ஓம் க்லீம் கார | நிவாசின்யை | நம |
| ஓம் க்லீம் கார | ஸாதகபராயை | நம |
| ஓம் க்லீம் கார | கலுஷாபஹாயை | நம |
| ஓம் க்லீம் கார | புஷ்டி ஸந்தாயை | நம |
| ஓம் க்லீம் கார | கமலாஸனாயை | நம |
| ஓம் க்லீம் கார | மதுபாயின்யை | நம |
| ஓம் க்லீம் கார | சாப ஹஸ்தாட்யாயை | நம |
| ஓம் க்லீம் கார | ரேஷுபாஹுகாயை | நம |
| ஓம் க்லீம் கார | ஸூம மத்யஸ்தாயை | நம |
| ஓம் க்லீம் கார | ஸூம சோபிதாயை | நம |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் க்லீம் கார | மதுராலாபாயை | நம |
| ஓம் க்லீம் கார | ஆங்குச சோபிதாயை | நம |
| ஓம் க்லீம் கார | பத்ம ஹஸ்தாட்யாயை | நம |
| ஓம் க்லீம் கார | மது வாபிகாயை | நம |
| ஓம் க்லீம் கார | ஹத குதைத்யெளகாயை | நம |
| ஓம் க்லீம் கார | ஆரோத்பல மாலிகாயை | நம |
| ஓம் க்லீம் கார | ரானல ஸந்தக்த ஸமூஹிதாயை | நம |
| ஓம் க்லீம் கார | நந்தோத்யான மணிமண்டப – சோபிதாயை | நம |

ஓம் டகாரரூபாயை நம
ஓம் டகாரக்ஷர பிரீதாயை நம
ஓம் டகாரமோத தாயின்யை நம
ஓம் டகாரபூஜ்யாயை நம
ஓம் டகாரகா மேஸ்வர்யை நம

ஓம் யைகார ரூபாயை நம
ஓம் யைகார சோபிதாயை நம
ஓம் யைகார பாஸ்கர்யை நம
ஓம் யைகார சம்பவாயை நம
ஓம் யைகார ரதஸம்ரூடாயை நம

ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் மஹா துர்க்கா தேவ்யை நமோ நம
நானாவித பத்திரபுஷ பாணிம் சமர்பயாமி

ஓம் சர்வமங்கள மாங்கல்யே
சிவே சர்வார்த்த சாதஹே!
சரண்யே த்ரியம்பஹே தேவி
நாராயணி நமோஸ்த்துதே!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்கைச் சித்தர் அவர்கள் இயற்றிய
# ராகுகால துர்க்கா அஷ்டகம்

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்கு மானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உலகை யீன்றவள் துர்க்கா உமையுமானவள்
உண்மையானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

செம்மை யாளவள் துர்க்கா செபமு மானவள்
அம்மை யானவள் அன்புத் தந்தை யானவள்
இம்மை யானவள் துர்க்கா இன்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உயிரு மானவள் துர்க்கா உடலு மானவள்
உலக மானவள் எந்தன் உடைமை யானவள்
பயிரு மானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்ப மற்றவள் துர்க்கா துரிய வாழ்வவள்
துறையு மானவள் இன்பத் தோணியானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நம்மை தாங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே.

குருவு மானவள் துர்க்கா குழந்தை யானவள்
குலமு மானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவு மானவள் திருசூலி யானவள்
திரு நீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே.

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயே வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே.

கன்னி துர்க்கையே இதயக் கமலத் துர்க்கையே
கருணைத் துர்க்கையே வீரக் கனத் துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்புத் துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸன் இயற்றிய தேசிக்காய் விளக்குப் பாடல்

தேசிக்காய் விளக்கினை ஏற்றிவைத்தோம்
எங்கள் துன்பங்க ளெல்லாம் போக்கிடுவாய்
வாரம் ஒரு முறை வணங்கிடுவோம் எங்கள்
வாழ்வினில் ஒளியினை ஏற்றிடுவாய்!

குத்துவிளக்கினை ஏற்றிவைத்தோம் உன்னை
கும்பத்தில் வைத்து பூஜை செய்தோம்
குங்குமம் கொண்டு அர்ச்சனை செய்தோம்
குடும்பத்தை நீயும் காத்திடுவாய்!

சாஸ்த்திரமுடனே ஸ்தோத்திரம் செய்தோம்
சான்னித்தியமாய் நீயும் வந்திடம்மா
சாஸ்தா பீடத்தில் ராகு காலத்தில்
சத்தியமாய் நீயும் வத்திடுவாய்!

மங்கள ரூபிணி துர்க்கையம்மா உனை
மங்கள வாரத்தில் போற்றுகிறோம்
மாதர்கள் செய்யும் மங்கள பூஜையை
மங்களமாய் நீயும் ஏற்றிடுவாய்!

துன்பங்கள் போக்கிடும் துர்க்கையம்மா உனை
தூயமனதுடன் வணங்கிடுவோம்
இன்பங்கள் தந்து எங்களைக் காப்பாய்
என்றுமே உன்னை வணங்கிடுவோம்!!

**இந்து சமய கலாச்சார முத்தமிழ்ச் சங்கம்**
**சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்**
**கொழும்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்க நிவாரண அஷ்டகம்

(அயிகிரிநந்தினி போல் பாடவும்)

மங்கள ரூபிணி மதியணி சூலினி
மன்மத பாணியளே;
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே;
கங்கண பாணியன் கனிமுகங் கண்டநல்
கற்பகக் காமினியே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாஷி ! 1

கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக்
காத்திட வந்திடுவாள்;
தானுறு தவஒளி தாரொளி மதியொளி
தாங்கியே வீசிடுவாள்;
மானுறு விழியாள் மாதவர் மொழியாள்;
மாலைகள் சூடிடுவாள்;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாஷி ! 2

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே;
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே;
எங்குலந் தழைத்திட எழில்வடி வுடனே
எழுந்தநல் துர்க்கையளே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாஷி ! 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணதண தந்தண தவிலொலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்;
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்;
பணபண பம்பண பறையொலி கூவிடப்
பண்மணி நீ வருவாய்;
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாஷி ! 4

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே;
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேலனைக்
கொடுத்தநல் குமரியளே;
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற்
சக்தியெனும்மாயே;
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாஷி ! 5

எண்ணிய படிநீ யருளிட வருவாய்
எங்குல தேவியளே;
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்;
கண்ணொளி யதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே;
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாஷி ! 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
யென்றுநீ சொல்லிடுவாய்;
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச்
சுகமதைத் தந்திடுவாய்;
படர்தரு இருளில் பாதியாய் வந்து
பழவினை ஒட்டிடுவாய்;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாஷி ! 7

ஜெய ஜெய பாலா சாமுண்டேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீ தேவி;
ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீ பரமேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீ தேவி ;
ஜெய ஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெய ஜெய ஸ்ரீ தேவி
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாஷி ! 8

SABARIMALAI SRI SASTHA PEEDAM
751/A, Bloemendhal Road,
Colombo - 15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குங்கும மகிமை
# குங்கும பஞ்சதசி

குங்கும மாவது குறைகளைத் தீர்ப்பது
குங்கும மாவது குடியினைக் காப்பது
குங்கும மாவது குணமத ளிப்பது
குங்கும மாவது கொல்வினை தீர்ப்பதே.

விதிதனை வெல்வது விமலையின் குங்குமம்
நிதிதனை ஈவது நிமலையின் குங்குமம்
பதிதனை காப்பது பதிவிரதை குங்குமம்
கதிதனை யாள்வதும் குங்கும மாமே.

தஞ்சமென்றோரைத் தடுத்தாண்டு கொள்வதும்
பஞ்ச மாபாதகம் பரிந்துமே தீர்ப்பதும்
அஞ்சின பேருக் கபய மளிப்பதும்
கஞ்சி காமாக்ஷியின் குங்குமமாமே.

நற்பத மீவது நாரணி குங்குமம்
பொற்பினை ஈவது பூரணி குங்குமம்
சிற்பரமாவது சிவகாமி குங்குமம்
கற்பினைக் காப்பதும் குங்கும மாமே.

செஞ்சுடர் போல்வது சீரான குங்குமம்
கொஞ்சு மழலையை கொடுப்பது குங்குமம்
அஞ்சு புலன்க ளடக்கி யருள்வதும்
கஞ்சி காமாக்ஷியின் குங்கும மாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயினைத் தீர்ப்பதும் நுண்ணறி வீசுவதும்
பேயினைத் தீர்ப்பதும் பெரும் புகழீவதும்
சேயினைக் காப்பதும் செல்வம் தருவதும்
தாயினை அர்ச்சித்த குங்கும மாமே.

சக்தி கொடுப்பதும் சத்தியம் காப்பதும்
பக்தி யளிப்பதும் பரகதி யீவதும்
முக்தி கொடுப்பதும் மும்மலம் தீர்ப்பதும்
சித்தி தருவதும் குங்கும மாமே.

நெஞ்சிற் கவலைகள் நீக்கி யருள்வதும்
செஞ்சொற் கவிபாடுஞ் சீரினை யீவதும்
வஞ்சப் பகைவரை வாட்டி யருள்வதும்
கஞ்சி காமாக்ஷியின் குங்கும மாமே.

சிவசிவ என்று திருநீறணிந்த பின்
சிவகாமி யேயெனச் சிந்தித்தணிவதும்
தவமான மேலோருந்தரித்துக் களிப்பதும்
பலவினை தீர்ப்பதும் குங்கும மாமே.

எவையெவை கருதிடில் அவையவையீவதும்
நவவகை சக்தியின் நலனைக் கொடுப்பதும்
குவிசெய் கரத்துடன் கும்பிட்ட பேருக்குக்
குவிநிதி யீவதும் குங்கும மாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ட இலக்குமி அருள தளிப்பதும்
இஷ்டங்களீவதும் ஈடற்ற குங்குமம்
கஷ்டந் தவிர்ப்பதும் காத்தெனை யாள்வதும்
சிஷ்டனாய்ச் செய்வதும் குங்கும மாமே.

குஷ்ட முதலான மாரோகந் தீர்ப்பதும்
நஷ்டம் வராதொரு நலனைக் கொடுப்பதும்
எட்டும் இரண்டும் அறிவித்தோர் வீடினை
கிட்டவே செய்வதும் குங்கும மாமே.

பட்டகாலிலே படுமெனக் கஷ்டங்கள்
விட்டிடாமலே வந்துமே வாட்டினும்
பட்டான பார்வதி பாதம் பணிந்தே
இட்டார் இடர் தவிர் குங்குமமாமே

சித்தந் தனைச் சுத்தி செய்வதற்கு கௌியதோர்
எத்துந் தெரியாத ஏமாந்த மாந்தரே
நித்தியம் தொழுதன்னை குங்குமந்தன்னை
நித்தம் தரித்துமே வீடடை வீரே.

மிஞ்சும் அழகுடன் குங்கும ஆடைகொள்
செஞ்சுடராகுமோ க(ா)ஞ்சி கா மாக்ஷீயின்
கஞ்ச மலர் முகத் தன்னிற் றிகழ்வதும்
பஞ்ச நிதி குங்கும மாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சிவாச்சாரியாரின்

# ★ அருள் ஜோதி ★

*(ஆன்மீக சஞ்சிகை)*

சர்வதேச இந்துமத குருபீடத்தினால் மாதாந்தம் வெளியிடும் சமய, சஞ்சிகையான சிவாச்சாரியாரின் அருள் ஜோதி எனும் நூலைப் பெற விரும்பும் அன்பர்கள் கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**சர்வதேச இந்துமத குருபீடாதிபதி**
**ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்**

**751/A, Bloemendhal Road,**
**Colombo - 15.**
**T.P. 072 - 422239, 527025**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச இந்துமத குருபீடம்

(அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்)

கொழும்பு

## ஏனைய வெளியீடுகள்

✧
✧
✧

1. கன்னி மூல கணபதி ....................................
2. ஸ்ரீ சக்ர தத்துவம்............................................
3. திருமணத் தத்துவம் ......................................
4. ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவாள் ..........................
5. ஸ்ரீ ஐயப்பன் பஜனாமிர்தம் ............................
6. சனிபகவான் ஸ்துதிமாலை ..............................
7. ஸ்ரீ சாஸ்தாபீடத்தின் ஆண்டுவிழா மலர் ............

## சர்வதேச இந்துமத குருபீடம்
## சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்

751/A, புளூமென்டால் றோட்
கொழும்பு – 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org